[2013 ஏப்ரல் 19

282—

நூலகக் கட்டடம் புதுப்பித்தல்

***19009—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, 35—வது வார்டு, மதிச்சியத்திலுள்ள நூலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட நூலகக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இடைபட்ட இக்காலகட்டத்தில் மதுரை மாநகர் 35—வது வார்டு 32—பூ, ஜவஹர் வீதி, காந்தி நகரில் அமைந்துள்ள ஷெனாய் நகர் கிளை நூலகமானது மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகை இல்லாமல் இலவசமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த மேற்படி கட்டடம் புதுப்பிக்கப்படுவதற்காக நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அணணாதுரை அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6,00,000/— வழங்கியுள்ளார். அவற்றோடு நூலக ஆணைக் குழு தன்னுடைய பங்காக ரூ.1,80,000—ம் வழங்கி, ஆக மொத்தம் ரூ.7,80,000 மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் ஒரு புதிய கட்டடமாக உருவாக்கப்பட்டு வருகிறது. மிகவிரைவில் அந்தக் கட்டடப் பணி முடிவடைகிற தருவாயிலே உள்ளது. முடிவடைந்தவுடன் திறப்பு விழா நடத்தப்படும் என்பதை மாணபுமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை ஷெனாய் நகரிலுள்ள கிளை நூலகம் 1964*

2013 ஏப்ரல் 19]

முதல் செயல்பட்டு வருகிறது. 22,213 நூல்கள் அதிலிருக்கின்றன. 2,500 வாசகர்கள் இருக்கிறார்கள். தினசரி 70 லிருந்து 100 பேர் வரையிலும் வந்து செல்கிறார்கள். பணியாளர்கள் இரண்டு பேருக்கு ஒருவர்தான் இருக்கிறார். டேபிள் இரண்டுக்கு ஒன்றுதான் இருக்கிறது, 50 சேர் தேவைப்படும் இடத்தில் பத்துதான் இருக்கிறது. அதுவும் ரிப்பேராக இருக்கிறது. கம்ப்யூட்டர் வசதியென்பது இல்லை. மாடியிலே ஒரு கட்டடம் எழுப்பினால் வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கு வசதியாக இருக்கும். மாணவ மாணவிகள் பாடக்குறிப்பெடுப்பதற்கு வாய்ப்பு கேட்கிறார்கள். அதேபோல காம்பவுண்டு சுவரை இன்னும் இரண்டடி உயர்த்திக் கட்டினால் அந்தப் பகுதி பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் 6 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இன்னமும் இரண்டு இலட்சம் ரூபாய் இருந்தால் இதுபோன்ற வசதிகள் செய்யமுடியும் என்று கருதுகிறார்கள். அதற்கான வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணுகுண்டு போட்டால் ஒருமுறைதான் வெடிக்கும். ஆனால் புத்தகத்தைத் திறக்கிறபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் வெடிக்கும் என்று எழுத்தாளர்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு மகத்தான நூல் நிலையத்திற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 இலட்சத்தை வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சுவர் கட்டுவது, டேபிள் சேர் அளிப்பது, கம்ப்யூட்டர் வைப்பது, வேலையாட்களை அமர்த்துவது என்று ஒரு நீண்ட பட்டியலை அவர் வாசித்தார். ஆனால், அவர் கொடுத்திருக்கிற தொகை 6 இலட்சம் ரூபாய். நீண்ட பட்டியலை வாசித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் அதிகமாக நிதி தர வேண்டுமென்கிற எண்ணம் எழவில்லையே என்கிற

வருத்தம் எங்களுக்குள்ளே இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவுடனும், பரிவுடனும் மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசீலிப்பார்கள். ஏனென்று சொன்னால், நூல்களைப் பற்றி அதிக உணர்வு மிக்கவர்கள், நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வாசிக்காத நூல்களே இல்லை. அவர்கள் படிக்காத நூல்களே இல்லை. தினமும் ஒரு நூலாவது வாசித்து விட்டுத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், தன்னுடைய பணியை முடிப்பார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு கருத்துலக மேதையாக, கருத்துலகத்தினுடைய காப்புப் பெட்டகமாக, ஒரு களஞ்சியமாக, அறிவுலக மேதையாக (மேசையைத் தட்டும் ஒலி) திகழ்கிறவர்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். அப்படிப்பட்ட அந்த அறிவுலக மேதை, கருத்துக் களஞ்சியம், நம்முடைய காப்புப் பெட்டகமாக விளங்குகிற அம்மா அவர்கள் நமக்குக் கிடைக்கவில்லையென்று சொன்னால், நாங்கள் எல்லாம் நாதியற்றுப் போய் இருப்போம். அப்படிப்பட்ட தலைசிறந்த முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேலும் தொகை ஒதுக்குவதற்குத் தயாராய் இருக்கின்றேன். அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை இந்த மாமன்றம் அறிய வேண்டுமென்பதற்காகத்தான் அதை இங்கே குறிப்பிட்டேன் என்பதைத் தெரிவித்து, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூலகங்கள் தமிழ்நாட்டிலே இருந்து வருகின்றன. நூலகங்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களைக் கொண்ட வாசகர் வட்டம் பல நூலகங்களுக்கு இல்லாத நிலைமை இருக்கிறது. அதை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சொந்தக் கட்டடம் இல்லாத நூலகங்கள் எத்தனை

2013 ஏப்ரல் 19]

இருக்கின்றன என்பதையும், அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல்கள் என்பன கருத்துக் கருவூலங்கள். ஒருவரது உள்ளத்தில் கருவான எண்ணங்களால் உருவான வளமான சிந்தனைகளை சொற்களால் வடித்தெடுத்து படிக்கின்ற மக்கள் ஆற்றல் பெற்றவர்களாக மாற்றுகின்ற வல்லமை தரக்கூடியவையாக நூல்கள் விளங்குகின்றன. காயம்பட்டவனுக்கு மருந்தாகவும், அறிவுப் பசி எடுப்பவனுக்கு விருந்தாகவும் நூல்கள் அமைகின்றன. அந்தவகையில் நம்முடைய பொது நூலகத் துறையின்மீது அவாவும், ஆசையும் வைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு வாசகர் வட்டம் சின்ன வட்டமல்ல; ஒரு பெரிய வட்டத்தை ஏற்படுத்துகிறவிதத்திலே சம்பந்தப்பட்டிருக்கிற அந்த மாவட்டத்திலே உள்ள எழுத்தாளர்களை அழைத்து அவர்களைக் கவுரவிக்கும்விதத்திலே ஒரு மிகப் பெரிய ஒரு வாசகர் வட்டத்தை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிறகு சொந்தக் கட்டடங்கள் இல்லாத இடங்களில் எல்லாம் சொந்தக் கட்டடம் எழுப்பப்படுமா என்ற கோரிக்கையும் வைத்திருக்கிறார். அதுசம்பந்தமாக மொத்தமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகக் கட்டடம் குறித்து பேசிய திரு. அண்ணாதுரை அவர்களுடைய பெயரிலும் அண்ணா இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அண்ணா நூலகத்தைப் போன்று

அறிவார்ந்த பதில்களை இங்கே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் கிராமப்புற நூலகங்களில் நூலகர்கள் அமர்த்தப்பட்டிருப்பது மிகவும் வரவேற்புக்குரிய விஷயம். நிறைய இளம் பெண்கள், இளைஞர்கள் இந்த வேலைவாய்ப்பை இப்போது தமிழக ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள். அதில் இளம் பெண்களுக்கான பிரசவ கால விடுமுறையில் அரசுச் சலுகை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து பரிசீலித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அந்த உரிமையை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளம் பெண்களுடைய பிரசவ காலத்திற்கு விடுப்பு அளிக்கப்படுமா என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்பட்டு அதற்கு உரிய முறையிலே தீர்வு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

268—

துணை மின் நிலையம்

***22847—திருமதி செல்வி இராமஜெயம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—